# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE,VIRUDHUNAGAR DISTRICT AT SRIVILLIPUTTUR.

Calendar )
Preliminary Register) CC.390/2016
Sessions)

( Prosecution P.W.3
Deposition of witness for (Defence
(Court

| | | | |
|---|---|---|---|
| Name | சந்திரசேகர் | -- | |
| Father's Name | உடையார் | Calling | உதவி இயக்குநர் (ஓய்வு) |
| Village | மதுரை | Religion | |
| Taluk | மதுரை | Age | 70 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1969 (Central Act 44 of 1969 on the 09th day of January 2026.

A11 to A13 absent. Petition filed.

**முதல் விசாரணை**

நான் தற்போது மருந்து கட்டுப்பாடு உதவி இயக்குநராக பணியாற்றி ஓய்வு பெற்று தற்போது மதுரையில் குடியிருந்து வருகிறேன். மேற்படி எதிரி 1ன் நிறுவனத்தை புலன் ஆய்வு செய்வதற்காக அ.சா.1 கொடுத்த ஆவணங்களின்படி நான் குஜராத்தில் உள்ள பரோடா சர்ஜிக்கல் பிரைவேட் லிமிடெட், வகோடியா என்ற நிறுவனத்தை ஆய்வு செய்ய இயக்குநர் மருந்துக்கட்டுப்பாட்டு துறை, சென்னை அவர்களின் ஆணை பெற்றேன். அந்த ஆணை **அ.சா.ஆ.2** ஆகும். 20.01.2011 அன்று நானும், பரோடா வட்டம் முதுநிலை ஆய்வாளர் திருமதி.H.N.தேசாய் உடன் எதிரி 11 நிறுவனத்தை கூட்டு ஆய்வு செய்தோம். ஆய்வின்போது எதிரி உடன் இருந்தார். மேலும் அந்த நிறுவனத்தில் எந்தவிதமான மருந்து தயாரிப்புகளும் செய்யப்படவில்லை. மேலும், மருந்து உரிமத்தின் குறிப்பிடப்பட்டுள்ள தொழில் நுட்ப அலுவலர்கள் மற்றும் எந்த அலுவலர்களும் எதிரி 11 நிறுவனத்தில் இல்லை. எதிரி 11 நிறுவனத்திற்கு Absorbent gauze cloth Sch FII என்ற மருந்து தயாரிப்பு உரிமம் படிவம் 25ல் உரிமம் எண். G943 Dt.08.11.1989 அதன் காலாவதி 31.12.2012 ஆகும். ஆய்வின்போது எதிரி 12யிடம் நான் எதிரி 12 நிறுவனத்தில் சேலத்தில் சேல மண்டல முதல் நிலை மருந்துகள் ஆய்வாளர் சாட்சி பன்னீர்செல்வம் கைப்பற்றிய மருந்து சம்மந்தமான கூட்டு ஆய்வு மேற்கொண்டோம். மேலும், எதிரி 12க்கு பட்டியல் சாட்சி தேசாய் 20.01.2011 அன்று எதிரி 11 நிறுவனத்தில் பராமரித்து வந்த ஆவணங்களையும், உரிமங்களையும் தாக்கல் செய்து ஒப்புதல் கடிதம் ஒன்று கொடுத்தார். அந்த கடிதம் **அ.சா.ஆ.3** ஆகும். மேலும், எதிரி 12 தன்னிச்சையாக வாக்குமூலம் ஒன்று கொடுத்தார். அது 5 தாள்களை

கொண்டது. 12 வது எதரி கொடுத்த வாக்குமூலம் **அ.சா.ஆ.4** ஆகும். 12 வது எதிரி கொடுத்த வாக்குமூலத்தில் தாங்கள் காண்பித்த மேற்படி மருந்தை தன்னால் எதிரி M/s.சக்திவேல் முருகன் டெக்ஸ்டைல்ஸ், சத்தரப்பட்டி நிறுவனத்திடமிருந்து பெற்றேன் என்றும், எங்கள் நிறுவனத்தின் சார்பாக மேற்படி மருந்தினை 1 வது எதிரி நிறுவனத்தில் தயார் செய்து எதிரி குரு டெக்ஸ்டைல்ஸ் மற்றும் முத்துமாரி டெக்ஸ்டைல்ஸ் நிறுவனத்தின் வாயிலாக காட்டன் ஓவன் கிரே கிளாத் என்ற பெயரில் எதிரி 11 நிறுவனத்திற்கு விநியோகம் செய்தனர் என்றும், அதற்கான கொள்முதல் விலையை செக் மூலமாக அனுப்பினேன் என்று தெரிவித்து இருந்தார். எதிரி 12 தாக்கல் செய்த மருந்து தயாரிப்பு ரிஜிஸ்டரை ஆய்வு செய்ததில் 12 ம் எதிரி தன் நிறுவனத்தில் Absonbent gauze cloth Sch FII என்ற மருந்தை தயார் செய்யவில்லை என்று கண்டறியப்பட்டது. தயாரிப்பு ரிஜிஸ்டரை பார்த்ததில் மூலப்பொருட்கள் Column மூலப்பொருட்கள் எழுதவேண்டிய இடத்தில் Absorbent Gauze cloth Sch FII என்ற முடிவு பொருள் என்று பெயர் எழுதப்பட்டு இருந்தது. ஒரு முடிவு பொருள் தயார் செய்யவேண்டுமானால் மூலப்பொருட்கள் என்னென்ன எந்தெந்த அளவு சேர்க்கப்பட்டது மேலும், எந்த முறைப்படி தயார் செய்யப்பட்டது என்ற விபரமும் எழுதப்படவில்லை. ஆகையார் மருந்து உரிமத்தில் வழங்கப்பட்ட மருந்து மேலும் சேலத்தில் கைப்பற்றிய மருந்து எதிரி 11 நிறுவனத்தில் தயாரிக்கப்படவில்லை என்பது கண்டறியப்பட்டது. 3 முதல் 255 பக்கங்கள் கொண்டது. அந்த தயாரிப்பு ரிஜிஸ்டரில் சான்றிட்ட நகல் **அ.சா.ஆ.5** ஆகும். எதிரி 11 ன் நிறுவனத்தின் மருந்து உரிமங்கள் Articles of Memorandum உண்மை நகலில் மருந்து மற்றும் அழகு சாதன சட்டப்பிரிவு 22(1)(CCA) ன் படியும் மற்றும் பிரிவு 22(2A)ன் படியும் எதிரி 12 ம் நானும் பட்டியல் சாட்சி தேசாயும் கையொப்பம் இட்ட நகல் பக்கம் 1 முதல் 75 வரையுள்ளது **அ.சா.ஆ.6** ஆகும். மேலும், எதிரி 11 நிறுவனத்தில் பராமரித்து வந்த பகுப்பாய்வு அறிக்கையை ஆய்வு செய்ததில் அதை Handloom Cotton Gauze Absonbent என்ற பெயரில் சோதனை செய்யப்பட்டு இருந்தது. 1 முதல் 121 பக்கங்கள் அது **அ.சா.ஆ.7** ஆகும். மேலும் எதிரி 11 ன் நிறுவனத்தில் பராமரித்து வந்த Manufactur Register பகுப்பாய்வு அறிக்கைகளையும், ஆய்வு செய்தபோது அவை Fabricate செய்த ரெக்கார்டுகள் என்று கண்டுபிடிக்கப்பட்டது. எதிரி 11 நிறுவனத்தில் மேற்படி மருந்துகள் தயாரித்ததற்கான எந்த ஒரு அறிகுறியும், ஆவணங்களை ஆய்வு செய்தபோதும் எதிரி 12 Cotton Cloth என்ற பெயரில் விற்பனை ரசீதுகள் மூலம் எதிரி 12 வாங்கி Absorbent Gauze என்ற பெயரில் விற்பனை செய்தது தெரியவந்தது. அந்த விற்பனை ரசீதுகள் 1 முதல் 48 பக்கங்கள் அது **அ.சா.ஆ.8** ஆகும். எதிரி 11 குஜராத் மாநில மத்திய மெடிக்கல் ஸ்டோர் ஆர்கனிசேசனிடம் ரேட் காண்ட்ராக்ட் மூலம் குஜராத்தில் உள்ள அரசு மருத்துவமனைகளுக்கு விற்பனை செய்தது தெரியவந்தது, விற்பனை ரசீது 1 முதல் 138 பக்கங்கள் அது **அ.சா.ஆ.9** ஆகும். நான் 28.01.2011 அன்று பரோடா சர்ஜிக்கலில் ஆய்வு செய்த அறிக்கையை இயக்குநர், மருந்து கட்டுப்பாட்டுத் துறை சென்னை அவர்களுக்கு, உதவி இயக்குநர் மண்டலம் மூலமாக அறிக்கை ஒன்றை அனுப்பினேன். அந்த அறிக்கை **அ.சா.ஆ.10** ஆகும். எதிரி 11 மற்றும் 12 க்கு நான் மருந்து மற்றும் அழகு சாதன சட்டம்ம 1940 பிரிவு

18(எ)(1) உடன் இணைந்த 17(பி)(இ)ன் படியும் மற்றும் 18(பி)ன் படியும் விளக்கம் கேட்டு குறிப்புரை அனுப்பினேன் அந்த குறிப்புரை **அ.சா.ஆ.11** ஆகும். 03.02.2011 ம் தேதியிட்ட 12 வது எதிரிக்கு நான் அனுப்பிய விளக்கம் கோரும் கடிதம் அனுப்பினேன். அது **அ.சா.ஆ.12** ஆகும். 15.02.2011 அன்று எதிரிகள் 11 மற்றும் 12 கால அவகாசம் கேட்டு பதில் கடிதம் அனுப்பினார்கள் அந்த கால அவகாசம் கோரும் கடிதம் முறையே **அ.சா.ஆ.13** ஆகும். மேற்படி எனது விரிவான ஆய்வறிக்கையை 16.03.2011 அன்று மேற்படி மருந்து சட்ட விதிமீறல்களுக்கு எதிரிகள் 1 முதல் 13 வரை மீது நடவடிக்கை எடுக்க இயக்குநர், மருந்து கட்டுப்பாட்டுத் துறை, சென்னை அவர்களுக்கு அனுமதி ஆணை வழங்க கோரி அறிக்கை அனுப்பினேன், அந்த அறிக்கை **அ.சா.ஆ.14** ஆகும். நான் 05.07.2006 முதல் 13.11.2011 வரை விருதுநகர் சரக மருந்து ஆய்வாளராக பணியாற்றினேன். தமிழக சுகாதாரம் மற்றும் குடும்பநலத்துறை அரசாணை எண். 797 தேதி 30.04.1987 ன் படி தமிழக அரசு இதழில் நான் ஒரு மருந்து ஆய்வாளராக தமிழ்நாடு முழுவதும் ஆய்வு செய்ய பிரகடனம் செய்யப்பட்டுள்ளது. அரசாணை **அ.சா.ஆ.15** ஆகும். இந்நிலையில் நான் வேறு இடம் மாற்றலாகி சென்று விட்டதால் வழக்கு கோப்புகளை எனக்குப் பின் பொறுப்பு ஏற்றுக்கொண்ட திருமதி. விஜயலெட்சுமியிடம் ஒப்படத்தேன். விஜயலெட்சுமி தற்போது இறந்துவிட்டார். நீதிமன்றத்தில் விஜயலெட்சுமி புகார் மனு அளித்துள்ளார்.

**<u>11,12 ம் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

27.12.2010 அன்று திரு.கார்த்திக்கேயன் அவர்கள் தலைமையில் நடந்த ஆய்வுக் குழுவில் நானும் சென்றேன். 28.12.2010 ம் தேதி திரு.கார்த்திக்கேயன் அவர்களிடமிருந்து வழக்குக் கோப்புகள் அனைத்தையும் பெற்றுக்கொண்டேன். பரோடா சர்ஜிக்கல் தொடர்பாக என்ன ஆவணங்களை கார்த்திக்கேயன் ஒப்படைத்தார் என்று ஞாபகமில்லை. 11 மற்றும் 12 ம் எதிரிகள் தொடர்பாக எந்த ஆவணங்களும் சத்திரப்பட்டியில் வைத்து பறிமுதல் செய்யப்படவில்லை என்று சொன்னால் சரிதான். 6 ம் எதிரி சங்கரலிங்கம் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் தான் 11 மற்றும் 12 ம் எதிரிகள் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. சங்கரலிங்கம் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் தான் குஜராத் சென்று பரோடா சர்ஜிக்கல் நிறுவனத்தில் ஆய்வு செய்தோம் என்றால் அது மட்டும் காரணமில்லை சேலம் மருந்து ஆய்வாளர் கைப்பற்றிய மகஜர் மற்றும் படிவம்–16 இவற்றின் அடிப்படையிலும் சென்றோம். பன்னீர்செல்வம் கொடுத்த ஆவணங்களின் நகல்கள் இந்நீதிமன்றத்தில் உள்ளது. அசல் படிவம் சேலத்தில் தாக்கல் செய்திருக்கலாம். மேற்படி விசயத்தை என்னுடைய முதல் விசாரணையில் சொல்லியிருக்கிறேனா என்றால் அது பற்றி சொல்லவில்லை. சாட்சி நாகலெட்சுமி, சாட்சி பன்னீர்செல்வம் ஆகியோரிடம் வாக்குமூலம் வாங்கி தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். பன்னீர் செல்வத்திடமிருந்து வாங்கிய வாக்குமூலத்தில் எந்த தேதியில் அந்த படிவம் 16 ஐ வாங்கினேன் என்று குறிப்பிடவில்லை. நான் சொன்னது போல பன்னீர் செல்வம் என்பவர் V Trans நிறுவனத்தில் சோதனை எதுவும் செய்யவில்லை என்றும், அதனால்

தான் அது பற்றி வாக்குமூலத்தில் கூறவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. அவ்வாறு V Trans நிறுவனத்தில் ஆய்வு செய்திருந்தால் அங்கு கைப்பற்றப்பட்ட பொருட்களை தாக்கல் செய்திருப்போம் என்று சொன்னால் சரியல்ல. பன்னீர் செல்வத்திடமிருந்து வாங்கியதாக சொல்லும் பொருட்களை குஜராத்திற்கு ஆய்வுக்கு செல்லும்போது எதுவும் கொண்டுசெல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. அந்த படிவம் 16 ஐ குஜராத்திற்கு கொண்டு சென்றேன். மேற்படி படிவம் 16 ல் சொல்லப்பட்டுள்ள பொருட்களை எடுத்துச் செல்லவில்லை. அவைகளை ஏற்கனவே சேலம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துவிட்டார்கள். பன்னீர்செல்வம் என்னிடம் சான்றுப்பொருள் எதையும் ஒப்படைக்கவில்லை. பரோடா சர்ஜிக்கல் நிறுவனத்தில் நாங்கள் ஆய்வு செய்யும்போது Absonbent Gauze தயார் செய்ததற்குரிய உரிமம் பெயரளவில் இருந்தது, ஆனால் தயாரிப்பு எதுவும் நடக்கவில்லை அதற்கு பொறுப்பான ஆட்களும் அங்கு இல்லை. அந்த உரிமம் எந்த ஆண்டு பரோடா சர்ஜிக்கல் நிறுவனத்தால் வாங்கப்பட்டது என்றால் 08.11.1989 ல் வாங்கப்பட்டது, அது 31.12.2012 வரை காலஅவகாசம் உள்ளது. ஒரு பொருளை உரிமம் இல்லாமல் உற்பத்தி செய்தால் தவறு என்றால் தவறு தான். 1989 ல் உரிமம் வாங்கி 2010 ல் உற்பத்தி நடக்கவில்லை என்றால் அது சட்டப்படி தவறு இல்லை என்று சொன்னால் சரியல்ல. 11 ம் எதிரிக்கு 1989 ல் மேற்படி உரிமமானது குஜராத் மாநில அரசால் வழங்கப்பட்டது. தமிழகத்திற்கு நடக்கும் தவறுகளுக்குத்தான் நாங்கள் நடவடிக்கை எடுக்க முடியும் என்றும் குஜராத் மாநிலத்தில் நடக்கும் தவறுகளுக்கு நாங்கள் நடவடிக்கை எடுக்க முடியாது என்றும் சொன்னால் சரியல்ல. அவ்வாறு தவறு நடந்திருந்தால் குஜராத் மாநில அரசுக்குத்தான் கடிதம் எழுதி நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும் என்று சொன்னால் சரியல்ல. இவ்வழக்கில் பரோடா சர்ஜிக்கல்ஸ் லேபிள் மற்றும் அந்த பெயரிட்ட Gauze Absorbent எதையும் சத்திரப்பட்டியில் கைப்பற்றி இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை. குஜராத் மாநில மருந்து அதிகாரி H.N. தேசாய் என்பவர் 12 ம் எதிரிக்கு கொடுத்த கடிதத்தின் உண்மைத்தன்மை பற்றி அவரை விசாரித்தால் தான் தெரியவரும் என்றால் சரியல்ல. மேற்படி விசயமானது அவர் வந்து சாட்சியம் அளித்தால் தான் உண்மைத்தன்மை தெரியவரும் என்று சொன்னால் சரியல்ல. குஜராத்தில் 12 ம் எதிரியிடமிருந்து வாங்கியதாக சொல்லும் ஆவணங்களுக்கும், இவ்வழக்கில் சொல்லியுள்ள குற்றச்சாட்டுகளுக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. சேலத்தில் பன்னீர் செல்வம் அவர்கள் தயார் செய்த மகஜரில் கண்டுள்ள சாட்சிகளை விசாரிக்கவும் இல்லை, சாட்சி பட்டியலை விசாரிக்கவும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. பன்னீர் செல்வம் உண்மையிலேயே யாரையும் விசாரணை செய்யவில்லை என்றும், அதனால் தான் யாரையும் சாட்சி பட்டியலில் சேர்க்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. 6 ம் எதிரி சங்கரலிங்கம் என்பவர் தான் காழ்ப்புணர்வோடு 11,12 ம் எதிரிகளைப் பற்றி பொய்யாக ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்துள்ளார் என்றும் அதனடிப்படையில் தான் அவர்கள் மீது இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் சொன்னால் சரியல்ல. நான் சட்டப்படியான விசாரணையை மேற்கொள்ளாமல் 11,12 எதிரிகள் மீது குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளேன்

என்று சொன்னால் சரியல்ல. 11, 12 எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் எந்த சம்மந்தமுமில்லை என்று சொன்னால் சரியல்ல.

<u>13 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

27.12.2010 ம் தேதி ஸ்ரீ சக்திவேல் முருகன் டெக்ஸ்டைல்ஸ் நிறுவனத்தில் ஆய்வு செய்தபோது நானும் சென்றேன். அங்கு கைப்பற்றப்பட்ட ஆவணங்களில் நான் கையெழுத்துப் போட்டேனா என்றால் போடவில்லை. சான்றுப்பொருள் Absorbent Gauze கைப்பற்றும்போது நான் அங்கு இருந்தேனா என்று ஞாபகமில்லை. சா.பொ.1 ஐ பார்வையிட்டு தான் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்தேன். சா.பொ.1 மருந்துப் பொருளில் உற்பத்தி தேதி ஜீன் 2008 என்றும், காலாவதி தேதி மே 2010 என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி சான்றுப் பொருளை கைப்பற்றியது 27.12.2010 ஆகும். அச்சமயத்தில் சா.பொ.1 காலாவதியாகிவிட்டது என்றும், அதைக் கூட கவனிக்காமல் 13 ம் எதிரி மீது குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றும் சொன்னால் சரியல்ல. இதைத்தவிர வேறு எதுவும் 13 ம் எதிரிக்கு எதிராக கைப்பற்றப்படவில்லை என்று சொன்னால் சரிதான். ஸ்ரீ சக்திவேல் முருகன் டெக்ஸ்டைல்ஸ் நிறுவனத்தில் சான்றுப் பொருள் 1 ஐ 13 ம் எதிரி நிறுவனத்திற்காக தயார் செய்ததாக ஆவணம் எதையும் பார்க்கவில்லை. ஆனால் சங்கரலிங்கம் வாக்குமூலம் கொடுத்துள்ளார். சங்கரலிங்கம் கொடுத்த வாக்குமூலத்திலும் 13 ம் எதிரிக்காகத்தான் சா.பொ.1 ஐ தயார் செய்தோம் என்று குறிப்பிட்டுச் சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. 13 ம் எதிரி மீது வழக்குத் தொடர படிவம் 16 ன் படி எதிரிக்கு அறிவிப்பு அனுப்பி அவர் கொடுத்த பதில் திருப்தி இல்லை என்பதால் இயக்குநர், மருந்துக்கட்டுப்பாட்டுத்துறை அவர்களிடம் பரிந்துரை பெறப்பட்டது. நான் இயக்குநருக்கு எழுதிய கடிதம், வழக்குத் தொடர அனுமதி கேட்டு எழுதப்பட்டக் கடிதமாகும். புலன் விசாரணை சரியாக செய்யாமல் எவ்வித ஆதாரம் இல்லாமல் 13 ம் எதிரி மீது குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. Spurious Drug என்பதன் இலக்கணம் இவ்வழக்கில் 13 ம் எதிரிக்கு எதிராக பொருந்தாது என்று சொன்னால் சரியல்ல. மகாராஷ்டிராவில் உள்ள பாக்கிய ஸ்ரீ நிறுவனத்திற்கு சென்று ஆய்வு செய்து பொருள் எதையும் கைப்பற்றவில்லை, எனவே 13 ம் எதிரி மீது தாக்கல் செய்துள்ள இவ்வழக்கு பொய்யானது என்று சொன்னால் சரியல்ல.

<u>மறு விசாரணை</u> இல்லை.

சாட்சியின் கையொப்பம்

**Name of the Interpreter : Not necessary**

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1969 (Central Act 44 of 1969 on the 09th day of January 2026.

Taken down by me open court read over to the witness in the presence of accused and admitted by the witness to be correct.

M VEERANAN

Digitally signed by M VEERANAN
Date: 2026.01.19 11:44:26 +0530

**Chief Judicial Magistrate,**
**Virudhunagar District at**
**Srivilliputtur.**